டத்தில் உள்ள ஏராளமான மீனவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து நம்முடைய பகுதியிலேயே வியாபாரம் செய்கிற வகையில் அந்தத் துறைமுகப் பணியை இந்த ஆண்டே முடித்திடவும், மேலும் இனையம் போன்ற இடங்களில் அதிகமான அளவில் சின்ன மீன்பிடித் துறைமுகங்களை அமைத்திடவும் இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் துறைமுகப் பணி 1982-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பல்வேறு காரணத் தால் அந்தப் பணிகள் விரைவாக நடைபெறாத காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பகுதி மீனவர்களுக்கு பயன் அளிக்கிற வகையில் விரைவில் அந்தத் துறைமுகத்தைக் கட்டி முடிக்கவேண்டுமென்று அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு 234 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கி, அதாவது மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற அளவுக்குரிய நிதியுடன் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது மறு மதிப்பீட்டின் அடிப்படையில் 684 இலட்சம் ரூபாய் ஆகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணை 72-ன் மூலம் ரூபாய் 684 இலட்சத்திற்கு 6—2—1990 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு விரைவாக பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகிற ஜூன் 1990-க்குள் ளாக அந்தப் பணிகள் முடிவடைந்து விடும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதி ரோடு வசதி போன்ற மற்றைய பணிகள் வருகிற ஏப்ரல் 1991-க்குள்ளாக நிச்சயமாக முடிவடைந்துவிடும். அது மீனவர்களுக்குப் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகள் மதிப்பு.

*1536—திரு. எஸ் எஸ். கருப்பசாமி,
திரு. என். பழனிவேல்,
திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1-1-1989 அன்றுள்ளபடி, மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கி யுள்ள துணிகளின் மொத்த மதிப்பு என்ன ?

1990 மார்ச் 24]

(ஆ) தேங்கியுள்ள துணிகளை விற்பனை செய்வதற்கு அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ள இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1-1-1989 அன்று நிலவரப்படி மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகளினுடைய மொத்த மதிப்பு ரூ. 5,558.99 இலட்சம் ஆகும்.

(ஆ) மற்றும் (இ) தேங்கிக் கிடக்கின்ற துணிகளை மட்டுமல்லாமல் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற புதிய துணிகளின் தேக்கம் இல்லாமல் விற்பனை செய்வதற்கு தள்ளுபடி மானியமாக 90 நாட்கள் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், மீண்டும் அந்த 90 நாட்கள் வழங்கப்பட்டு கைத்தறி விழா, பேரறிஞர் பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களை முன்னிட்டு 90 நாட்கள் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு கடந்த ஆண்டை விட அதிகமான துணியை விற்பனை செய்துள்ளோம்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி விற்பனைக்கு ஆண்டு ஒன்றுக்கு 90 நாட்கள் 20 சதவிகிதம் மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்களுடைய அறிக்கைப்படி ஏறத்தாழ 55 கோடி ரூபாய் அளவுக்கு மாநிலத்தில் கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். வருடம் ஒன்றுக்கு 90 நாட்கள், கைத்தறி வாரம், பண்டிகை தினங்களில் கொடுப்பது என்பதற்குப் பதிலாக மாதாமாதம் 1-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை கொடுத்து, வருடத்திற்கு 60 தினங்களுக்கும், தீபாவளி பண்டிகை, பொங்கல் பண்டிகை போன்றவற்றிற்கு 30 நாட்களுக்கும் கொடுத்து விற்பனை செய்தால் சீரான ஒரு விற்பனை இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசினுடைய சிறப்பு குறிப்பு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் 90 நாட்கள் தள்ளுபடி வழங்கப்படும். அந்த 90 நாட்கள் தள்ளுபடி முறையாக சீரமைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கேற்ப தொடர்ந்து இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

[1990 மார்ச் 24

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. ஒரு ஆண்டுக்கு முன்பாகப் போடப்பட்ட கேள்வி. அதற்கு இன்றையதினம் அமைச்சர் அவர்கள் 1—1—1989 அன்று நிலவரம் கணக்குப்படி $5\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றைய நிலவரம் என்ன என்று எங்களுக்குத் தெரியபடுத்தவேண்டும் அத்தோடு இந்த தேங்கிக்கிடக்கக்கூடிய துணியால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை சரி செய்வதற்கு அரசு மானியத் தொகை கொடுப்பதோடு இந்த தேங்கிக் கிடக்கின்ற துணிகளை விற்பனை செய்வதற்கு தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கார்டுகள் மூலம் கார்டுகளுக்கு மலிவு விலையிலேயே இந்த துணிகளை ஏழைஎளிய மக்கள் வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய முறையிலே இதை சப்ளை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, தற்போது தேங்கியிருக்கின்ற துணிகளின் நிலவரம் பற்றி வருகின்ற மானியக் கோரிக்கையில் அது சம்பந்தமாக தெளிவாக விளக்க இருக்கிறேன். இப்படிப்பட்ட துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனையாகின்றன. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து அனுப்பப்பட்டு கோ-ஆப் டெக்ஸ் மூலமாக பாதி துணி விற்பனை செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் ஆனால் ரேஷன் கடையில் விற்பனை செய்கின்ற உத்தேசம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ்-லிருந்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1988-89 ஆண்டுக்கு நிலுவை பாக்கி எவ்வளவு இருந்தது என்பதையும், 1989-90-ல் பட்டுவாடா செய்யப்பட்டது எவ்வளவு என்பதையும் அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா தேங்கிக்கிடந்த துணிகளுடைய மதிப்பைப் பொறுத்தது. தனி வினா எழுப்பினால் விரிவான விடையை அளிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.